தமிழகத்து ஏழைகள், தமிழகத்து அனைத்துத் தரப்பு மக்கள்தான் தன் வயிற்றுப் பிள்ளைகள் என்று தமிழகத்து மக்களினுடைய நலனுக்காக ஒரு நாளைக்கு 20 மணி நேரம் புரட்சித் தலைவி உழைத்த காரணத்தால், நிர்வாகத்தைத் தூய்மையாக நடத்திய காரணத்தால், அனைத்துத் துறைகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து fingertip knowledge of each and every department என்ற முறையிலே ஒவ்வொரு துறையினுடைய உள் விவகாரங்களை நன்கு நுனி விரலில் வைத்து பிரச்சினைகளை அணுகிய காரணத்தால், தாழ்ந்த தமிழகம் இன்று தலை நிமிர்ந்து விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வீழ்ந்த தமிழகம் இன்று உயர்ந்து விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 7 கோடி தமிழகத்து மக்களும், தங்களது தலைவி, புரட்சித் தலைவி அம்மாதான்; வருங்காலத்திலும் புரட்சித் தலைவி அம்மாதான் தமிழகத்தை—ஏன் பாரதத்தையே (மேசையைத் தட்டும் ஒலி) அலங்கரிக்கக்கூடிய திறமை மிக்க தலைவி, திறமை மிக்க முதலமைச்சர், திறமை மிக்க நிர்வாகி என்ற பெயரைப் பெற்றுத் தந்திருக்கின்ற மக்களுக்கு நான் நன்றி கூறி என் உரையை முடிக்கின்றேன்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 27–01–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 27–01–2006, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

2006 ஜனவரி 25] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

27-01-2006 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 27-01-2006 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. கன்னியாகுமரியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக சென்னையில் உள்ள திருவாளர்கள் ஜெர்மன் தொழுநோய் மற்றும் காசநோய் நிவாரண சங்கத்திற்கு திருநெல்வேலியிலுள்ள தினேஷ் எண்டர்பிரைசஸ் நிறுவனம் விற்பனை செய்துள்ள மேசை மின் விசிறிகளின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரித் துறையின் 2-8-2005 ஆம் நாளிட்ட 88 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

52. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 6-9-2005 ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

53. மோட்டார் வாகனங்களுக்குரிய திரவ பெட்ரோலிய வாயு மாற்றுக் கருவிகளின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைத்து வணிக வரித் துறையின் 19-10-2005 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]